REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 8உ செவ்வாய் (24—9—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 9உ புதன் (25—9—57) [இதழ் 87

### 'அணுகுண்டு'களுக்குத் தடை: டெல்லி சர்க்கார் உத்தரவு

'அணுகுண்டுகள்' மற்றும் சில ரக வெடிகள், ஒன்றரை அவுன்சு எடைக்கு அதிகமான அளவில் தயாரிக்கப்படக்கூடாது என்றும், இவற்றைத் தயாரிப்பது, விற்பனை செய்வது, உபயோகிப்பது இவை எல்லாம் சட்டவிரோதமானவை என்றும் டில்லி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

தடை செய்யப்பட்டுள்ள இந்த ரகங்கள் வெடிக்கப்படும் போது பெரும் சத்தம் கிளப்புவதாகவும், அருகிலிருப்போருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அபாயம் மிகுந்தவை என்றும், சர்க்கார், தடைக்கான காரண விளக்கம் தந்திருக்கின்றனர்.

# அக்டோபர் 13: இந்தி எதிர்ப்பு நாள்

## இந்தி ஆதிக்க எதிர்ப்புச் சக்திகளைத் திரட்டுவீர்

## நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்புவீர்

### திருவண்ணாமலை மாநாட்டில் பொதுச்செயலாளர் வேண்டுகோள்

"இந்த நாட்டு மக்களுக்கு இந்தி எதிர்ப்பு உணர்ச்சியையூட்டவும், இந்த நாட்டுத் தாயக மொழி தமிழைக் காப்பாற்றவும் இந்தி நமக்கு இம்மியளவும் அவசியமில்லையென்பதை எடுத்துரைக்கவும், அதற்கான கருத்துரைகளைப் பரப்புவதற்கான பணிகளை இன்றிலிருந்தே நாம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

"எனவேதான், முதற்கட்டமாக அக்டோபர் மாதம் 13-ம் நாள் ஞாயிறன்று 'இந்தி எதிர்ப்பு நாள்' என்ற நாளைக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதை அறிக்கையாக நான் விடுப்பதற்கிருக்கிறேன். எனவே, அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை, இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டு, நாடு நகரங்கள், பட்டிதொட்டிகள் அத்தனையிலும், கழகச் சொற்பொழிவாளர்கள் அத்தனைப் பேரையும் வரவழைத்து--கழகச் சொற்பொழிவாளர்கள் வர இயலாத இடத்திலே ஆங்காங்குள்ள தோழர்களே கட்டாயம் ஊர்வலம் நடத்தி, ஒலி முழக்கம் செய்து, கூட்டங்கள் போட்டு, இத்தகைய கருத்து விளக்கங்களை நாட்டு மக்களிடையே பரப்பி, எதிர்காலத்தில்—இந்தி எதிர்ப்புப் போராட்டம் வருகின்ற காலத்தில் அதற்கான வீரர்கள் படையைத் திரட்டுகிற அளவிலே, நல்ல பல கருத்துரைகளை எடுத்துக் கூறுகின்ற நாளாக அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையைக் கொள்ள வேண்டுமென்று கழகத் தோழர்கள் அத்தனைப் பேரையும், பொதுமக்களையும், இந்தி எதிர்ப்புணர்ச்சியிலீடுபட்டிருக்கிற அத்தனைப் பேரையும், நான் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

"அக். 13-ந் தேதியை, இந்தக் குரல் எழுப்புகிற அளவுக்கு நீங்களெல்லாம் தீர்மானம் நிறைவேற்றி, அடுத்து, இந்தி பரிசீலனைக் குழுவுக்குத் தலைவராக வந்திருக்கிற பந்த் (இந்தியாவினுடைய உள்நாட்டமைச்சர்) அவர்களுக்கு ஒரு தீர்மானத்தையும், தலைமைக் கழகத்துக்கு ஒரு தீர்மானத்தையும் அவ்வளவு படிப்பகங்களும், அவ்வளவு நூலகங்களும், அவ்வளவு அமைப்புகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அமைப்புகளும், தமிழ் மன்றங்களும் தமிழார்வம் கொண்டிருக்கிற மன்றங்களும், தீர்மானம் நிறைவேற்றி முன்சொன்னபடி பந்த் அவர்களுக்கும், தி. மு. கழகத் தலைமை நிலையத்திற்கும் அனுப்பிவைப்பீர்களேயானால்—தலைமைக் கழகத்துக்கு பல்வேறு அமைப்புக்கள், கிளைக் கழகங்களிலிருந்து வந்திருக்கும் தீர்மானங்கள் ஆயிரக்கணக்கில் இருக்குமேயானால், அவற்றை நான் சம்பந் அவர்களிடத்திலே கட்டிக் கொடுத்து, பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வரும்போது, அங்கு (டில்லிக்கு) அனுப்பப்பட்டவைகளின் நகல் என்று எடுத்துச் சொல்லவும், இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்று எடுத்துக்காட்டவும் அந்தக் கட்டுகளைப் பார்க்கின்ற பொழுது — அமைப்புக்களின் எண்ணிக்கைகளைப் பார்க்கின்ற பொழுது, எதிர்ப்புணர்ச்சியைப் பாராளுமன்ற உறுப்பினர்களும், அங்கே இருக்கிற அமைச்சர்களும் அறிந்துகொள்ளுகிற அளவுக்கு நாம் காட்டித்தீருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படியாக கிளைக் கழகத் தோழர்களையும், பிற அமைப்புக்களைச் சார்ந்தவர்களையும், தி. மு. கழகத் துணை அமைப்புகளையும் நான், விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

"எனவே, இப்போதிருந்தே அதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபட்டு அக். 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை **எதிர்ப்பு நாளாகக்** கொண்டாடி, அதனுடைய ஒலிமுழக்கம் எங்குபார்த்தாலும் கேட்கிற அளவுக்கு—நிறைவேற்றப்படுகிற தீர்மானங்கள் நம்முடைய வலிவையும் பொலிவையும் காட்டுகிற அளவுக்கு நீங்கள் அனைவரும் பணிபுரிய வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்"

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த 22—9—57-ல், திருவண்ணாமலை தி. மு. க. மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

## 'பொறுமையைச் சோதிக்காதீர்--- வேண்டுகோளை அவமதியாதீர்'

## 'தமிழ்நாடு எனப் பெயரிடத் தயக்கமேன்?'

### திருவண்ணாமலை மாநாட்டுத் தீர்மானங்கள்

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து முறியடிப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து திட்டம் வகுத்துத் தருமாறு பொதுச் செயலாளர் அவர்களை திருவண்ணாமலையில் கூடிய வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக இந்தி எதிர்ப்பு மாநாட்டினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

'தமிழ்நாடு' எனத் தாயகத்திற்குப் பெயரிடாமல் ஆட்சியாளர் காலங் கடத்துவது, அவர்களுக்குப் பேராபத்தைத் தேடித் தரும் என்ற எச்சரிக்கையும் பல்லாயிரம் மக்கள் குழுமிய அந்த மாநாட்டிலிருந்து கிளம்பியிருக்கிறது.

விலைவாசி ஏற்றம், வரிக்கொடுமை முதலியனவும் மாநாட்டவரால் பரிசீலிக்கப்பட்டு, அவற்றிற்குக் காரணமான சர்க்கார் மீது கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

முதுகுளத்தூர் வகுப்புக் கலவரம் பற்றியும் மாநாடு கருத்தறிவித்து, உடனடியாகச் சமாதானத்திற்கு வழிகோல ஆட்சியாளரை வற்புறுத்தியுள்ளது.

செப். 21, 22-ந் தேதிகளில் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட தி. மு. கழக மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கீழே தரப்படுகின்றன :—

### 1. அனுதாப தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரரும், நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளரும், தொழிற் சங்கங்களின் தலைவருமான தோழர் கே. வி. கே. சாமி, தூத்துக்குடியில் கழகத்தின் அரும்பணி ஆற்றி வந்த தோழர் தாளமுத்து ஆகியோரும், நாதசுர இசைப்பெரும் புலவராய் விளங்கிக் கலைத் துறையில் அரும்பணி ஆற்றிவந்த திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களும், நகைச்சுவை மன்னரும், தி. மு. கழகத்திடத்து நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு விளங்கியவரும், பெரு வள்ளலும் ஆகிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், வேலூர் ஆதிமூலம், வந்தவாசி தங்கவேலு ஆகியோரும் மறைந்தது குறித்து இம்மாநாடு மிக்க துன்பமும் துயரமும் கொள்வதோடு தன் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார்களின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர் ஆகியோருக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

—தலைவர்.

### 2. வாக்காளர்க்கு நன்றி தெரிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகம், முதன் முதலாகப் போதுமான வசதியற்ற நிலையில், கடந்த பொதுத் தேர்தலில் ஈடுபட்ட போதிலும், தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்களான வாக்காளர்கள், மாற்றுக் கட்சிகளின்பலமான தாக்குதலையும் பழிசுமத்தலையுங்கூடப் பொருட்படுத்தாமல், 17 இலட்சம் வாக்குகளை அளித்து, கழகத்திற்குக் குறிப்பிடத்தக்க வெற்றி தேடித்தந்ததற்காக இம்மாநாடு வாக்காளர் பெருமக்களைப் பாராட்டுவதுடன், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

—தலைவர்.

### 3. முதுகுளத்தூர் வகுப்புக் கலவரம்

இராமநாதபுர வட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், இராம

(4-ம் பக்கம் பார்க்க)

## 'டில்லியின் இந்தி ஆதிக்க முயற்சிகள்-தமிழர்களுக்குப் பேராபத்து'

### 'தாயகத்தோரே! தியாகம் புரியத் தயாராவீர்!'

### 'இந்தி பற்றிய அ. நி. சபையின் முடிவு எதேச்சாதிகாரமானது'

### 'தென்னவரை அடிமைப்படுத்தும் கருவியாகிவிட்ட அரசியல் சட்ட விதி அகற்றப்படவேண்டும்'

### திருவண்ணாமலை இந்தி எதிர்ப்புமாநாட்டின் குரல்

திருவண்ணாமலையில் கடந்த செப். 21-ந் தேதி நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாவது :—

(அ) இந்தி அல்லாத மொழியினர் மீது—குறிப்பாகத் தென்னாட்டின் மீது தபால்—தந்தி, இரயில்வே, புதிய நாணய முறை, வானொலிச் செய்தி போன்றவைகளில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இந்தியைத் திணித்து அரசியல் ஆதிக்கம்பெற எடுத்துக்கொண்டு வரும் பல்வேறு முயற்சிகளோடுகூட, பிற மொழியினர்மீது அரசியல் ஆதிக்கம் செலுத்த இந்தி ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதற்காகக் கேர் கமிட்டி மூலம் மத்திய அரசாங்கமும், அதனை நடத்தும் காங்கிரசுக் கட்சியும் பயங்கரத் திட்டம் தீட்டியிருப்பது, தென்னாட்டுக்கு வரவிருக்கும் பேராபத்து என்பதை எடுத்துக்காட்டுவதுடன், அந்தப் பேராபத்தினின்றும் நம்நாடு தப்பி விடுதலை பெற எத்தகைய தியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடவும், எல்லாவிதமான தியாகங்கள் புரியவும், தமிழர்கள் இன்று முதலே தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

(ஆ) மக்களின் கவனம் வேறு பக்கங்களில் ஈர்க்கப்பட்டிருந்த நேரத்தில் மக்களின் குறிக்கோளை எடுத்துக்காட்டத்தக்க முறையில் அல்லாமல், மக்களின் நேரடி வாக்குகளைப் பெறாமல், ஒரு கட்சியின் எதேச்சாதிகார முறையுடன் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் ஆதரவில் ஒரே ஒரு ஓட்டு மெஜாரிட்டியில், அவசர அவசரமாகவும், பொறுப்பற்ற முறையிலும் நிறைவேற்றப்பட்ட மொழி சம்பந்தமான விதி, மக்களின் உண்மையான குறிக்கோளைக் காட்டுவதாகாது என்பதாலும், அந்த விதி, இந்தியல்லாத பிற மொழியாளர்களை அடிமைப்படுத்தப் பயன்படும் ஆதிக்கக் கருவியாக இருப்பது தெளிவாகத் தெரிந்துவிட்டபடியாலும், உடனடியாக அரசியல் சட்டத்திலிருந்து மொழி சம்பந்தப்பட்ட அந்த விதி அகற்றப்பட வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகிறது.

(இ) தாய் மொழியில் ஆட்சித் துறை, நீதிமன்றத் துறை அலுவல்களை வெற்றிகரமாக்குவதுடன், பிற மாநிலங்களுடனும், உலகோடும் தொடர்பு கொள்ள ஆங்கிலத்தை இப்போதுபோலப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தை நீடிப்பது என்ற கருத்தினையும், இந்த மாநாடு ஆட்சியாளர்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறது.

(ஈ) இந்தி ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகத் தக்க திட்டம் தீட்டி, நடவடிக்கைகளை வகுத்திட பொதுச்செயலாளரை இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—9—57 செவ்வாய்

# ஆதாரக் கல்வி
அல்லது
# ஆளவந்தார்களின் குழப்பம்

'ஒரு குழந்தை கல்வி (எண்—எழுத்து) பயிலுவதுடன் கைத்தொழில் ஒன்றையும் பயின்று கொள்ளுகிறது என ஆதாரக் கல்வி குறித்துக் குறிப்பிடுவது தவறுடையதாகும். பயிலப்படும் கைத்தொழிலே குழந்தையின் வாழ்க்கைக் கல்விக் கருவியாகும் என்பதுதான் ஆதாரக் கல்வியின் உண்மைப் பொருளாகும்.'

காங்கிரசுத் தலைவர்கள் எனப்படுகின்றவர்களால் மிகைபட விளம்பரப்படுத்தப்பட்டு வரும் ஆதாரக் கல்விபற்றி, இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் ஆசாத் விளக்கமளித்துள்ளார். அவர் தந்துள்ள விளக்கத்திலேயே, ஆதாரக் கல்வி குறித்து அவரால் குறிப்பிடப்படும் உண்மையான பொருளை, ஆதாரக் கல்வியை மிகமிகத் தீவிரமாக ஆதரித்துவரும் தம் கூட்டுத் தோழர்களே இன்னும் தெரிந்து கொள்ளாமல் இருந்து வருகின்றனர் என்பது தெளிவாகின்றது.

ஆதாரக் கல்வி குறித்து, அதைத் தீவிரமாக ஆதரித்து வருகின்ற காங்கிரசுத் தலைவர்கள் அறிந்துள்ள இலட்சணமே இதுவென்றால், மற்றவர்கள் அதுபற்றி தெரிந்து கொண்டு இருப்பது மிகப் பெரும் சுழியாகத்தான் இருக்கக்கூடும். மேற்படி ஆதாரக் கல்வியைப் புகுத்திவரும் காங்கிரசு அமைச்சர்களினுடைய ஆதாரக் கல்வி அறிவே தெளிவற்றுக் கிடப்பதென்றால், அக்கல்வித் துறையில் பயின்று ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றவர்கள் அளிக்கும் பயிற்சியும் நகைப்புக்குரியதாக இருக்கக்கூடும். அத்தகு ஆசிரியர்களிடம் ஆதாரக் கல்வி பயிற்சி பெறும் மாணவச் சிறுர்கள் பெறக்கூடிய தொழிற் பயிற்சியும் மிகப் பெரும் குழப்படியாகத்தான் இருக்கக்கூடும். இச்சிறுர்களைக்கொண்டு எதிர்காலத்தில் உருவாகக்கூடிய நமது சமுதாயத்தை, கற்பனை செய்து பார்க்கின்றவர் எவரும் கண்கலங்கத்தான் செய்வர்.

கைத்தொழில்-உடலுழைப்பு பற்றி உள்ள உயர்ந்த மதிப்பை மீண்டும் உயிர்ப்பிக்க ஆதாரக் கல்வி அவசியம் என்றும் ஆசாத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதற்கு எடுத்துக்காட்டாக, இதுவரை கிராமத்தவர் கொண்டிருக்கும் மனப்போக்கையும், அதை மாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் ஒரு எடுத்துக்காட்டு மூலம் அவர் வற்புறுத்தியுள்ளார்.

ஒரு குடியானவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தால், அவ்விரண்டு பிள்ளைகளில் ஒரு பிள்ளையைப் பயிர்த் தொழிலில் பயிற்றுவிப்பதும், மற்ருெரு பிள்ளையை நகரில் வேறு பணிபுரிவதற்கென்று கல்வி கற்கப் பள்ளிக்கனுப்பிவிப்பதும், அக்குடியானவர் பழக்கம்; அப்பழக்கத்திற்கு இனி முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்; அதற்கு ஆதாரக் கல்விதான் தக்கக் கருவி என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'இத்தகு நிலைமையை நாம் மாற்ற விரும்புகிருேம். எதிர்காலத்தில், கிராமச் சிறுர்கள் அனைவரும் பள்ளிக்குச் செல்லவேண்டும்; கற்கவும் வேண்டும். ஆனுல் மூதாதையர் (குடும்பத் தொழில்) தொழிலைக் கைவிட்டுவிடுவதற்காக இல்லாமல், சிறந்த உழவர்—கொல்லர்—தச்சர்—ஆக ஆவதற்குக் கற்கவேண்டும்.'

இந்தியப் பேரரசு கைக்கொண்டு இருப்பதும், செயலாற்றி வருவதும், மேலும் மேலும் விரிவுபடுத்த இருப்பதுமான ஆதாரக் கல்வியின் உள்ளடக்கத்தை, இந்தியப் பேரரசு கல்வி அமைச்சர் ஆசாத் அவர்கள், ஒளிவு மறைவு துளியும் இல்லாமல் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிராமப் பகுதியில் இன்று சிறுர்களாக இருப்பவர்கள், எதிர்காலத்தில் பிறக்கப் போகின்றவர்கள் யாராக இருந்தாலும், குடும்பத் தொழிலைக் கற்றுக் கொண்டு, குடும்பத் தொழிலைப் பேணிக்காத்து வருகின்றவர்களாகத்தான் இருக்க வேண்டும் எனப் பொதுவாகக் காங்கிரசுக் கட்சியும், குறிப்பாக இந்தியப் பேரரசும் திட்டமிட்டிருக்கின்றன என்றுதான், இந்தியக் கல்வி அமைச்சர் ஆதாரக் கல்வியின் உள்ளடக்கம் குறித்துத் தந்துள்ள விளக்கத்திலிருந்து நாம் முடிவுகட்டிக் கொள்ளவேண்டும்.

கிராமத்தில் வாழும் ஒரு கொல்லனுக்கு, நான்கைந்து பிள்ளைகள் இருந்தாலும் அந்த நான்கைந்து பிள்ளைகளையும், தன் குடும்பத் தொழிலில்தான் பயிற்றுவிக்க வேண்டுமே அல்லாது, அச்சிறுவர்களில் ஒருவனுவது நகரஞ்சென்று குடும்பத் தொழில் தவிர்த்து வேறு பணி புரியவேண்டும் என அக்கொல்லன் எண்ணக்கூடாது. அப்படி எண்ணுவதேகூட தன்னுட்டுக்குச் செய்யும் மிகப் பெரும் துரோகம்; சமூக விரோதம் என்று அவன் முடிவு கட்டிக்கொண்டு, இயல்பாகத் தனது உள்ளத்தில் கிளர்ந்தெழக்கூடிய பேரவாவை, அவ்வவா எழுந்த உடனே கருவறுக்க அக்கொல்லன் முனைதல் வேண்டும். இவனைப் போன்றேதான், மற்றத் தொழில்களில் ஈடுபட்டுவரும் கிராமத்தவர்களும், தங்கள் பிள்ளைகளைத் தம்தம் குலத் தொழில்களில் பயிற்றுவிக்கச் சூளுரைத்துக் கொள்ள வேண்டும்.

உடலுழைப்புக்கும் கைத்தொழிலுக்கும் உரிய மதிப்பை மீண்டும் உயிர்ப்பிப்பதே ஆதாரக் கல்வியின் விழுமிய நோக்கம் என்று ஆசாத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அவ்விழுமிய நோக்கத்தை, ஆதாரக் கல்வியால் நிறைவேற்றிவைக்க முடியுமா இல்லையா என்பதைப் பிறகு ஆராய்வோம். அதற்கு முன்னதாக, இயந்திரத் துணைத் தொழில்துறை வெகு விரைவாக வளர்ந்துகொண்டுவரும் இக்காலத்தில், ஆதாரக் கல்வி மூலம் நிறைவேற்றக் கருதும் கிராமக் கைத்தொழில் பயிற்சிகள், அத்தொழில்களில் பயிற்சி பெறுகின்ற அனைவருக்கும் பணி புரிய வாய்ப்பளிக்குமா என்பது கண்டறியத்தக்கது. கிராமத் தொழில்களில் பயின்றவர்களிடை வேலையின்மையும், வாட்டமும், வறுமையும் குடி புகுவதற்கு இடம் ஏற்படுமா இல்லையா என்பதும் சிந்திக்கத் தக்கது.

ஒரு உழவனுக்குள்ள நான்கு பிள்ளைகளும், ஆதாரக் கல்வியின் உள்ளடக்கப்படியும், விழுமிய குறிக்கோள்படியும் உழவுத் தொழிலையே பயின்று கொள்வதாக வைத்துக் கொள்ளுவோம். மூத்த உழவனே நிலப்பஞ்சத்தில் அடிபட்டு, வரண்ட வாழ்விலுழன்று வளைந்து கிடக்கின்றபொழுது, ஆதாரக் கல்வி மூலம் உழவுத் தொழிலை மட்டுமே கற்றுத் தேறியுள்ள அவன் நான்கு பிள்ளைகளும், உழவு செய்வதற்கு நிலத்துக்கு எங்கே போவார்கள்? அவர்களுக்கு நிலம் எங்கிருந்து தருவது? இருக்கும் நிலத்தின் அளவைவிட, கிராமத்தில் உழவர் தொகை பல்கிப் பெருகி இருக்கிறது என்ற உண்மை, ஆசாத் போன்ற காங்கிரசு அமைச்சர்களாலும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

கரம்பையும் காட்டையும் உழவு நிலமாகத் திருத்திஅமைக்கலாம் என்றுலும், உழவை மட்டுமே நம்பிவாழும் கிராம மக்களின் எண்ணிக்கைக் கூடுதலாக இருக்கின்றது என்பது மட்டுமல்லாது, ஒவ்வொரு நாளும் அவ்வெண்ணிக்கை விரைந்து கூடிக்கொண்டு இருக்கின்றது என்பதும் காங்கிரசு ஆட்சியினர் அறியாததல்லவே!

இருக்கும் உழவர்களுக்கே ஆண்டு முழுதும் பணிபுரியும் வாய்ப்பில்லை என்றும், அதன் விளைவாக உழவர்களின் வாழ்க்கையில் வளமில்லை என்றும், அவ்வளத்தைக் கூட்டக் கைத்தொழில் ஒன்று தேவை என்றும் நியாயம் பேசி அல்லவா, காந்தி அடிகளால் கைராட்டை கிராம மக்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது? அதே காரணத்தைக் காட்டிதானே, இன்றும் காங்கிரசு ஆளவந்தார்கள், கைராட்டையுடன் கிராமத்தவர்களைப் பலமாகக் கட்டிப்போட்டு மக்கள் வரிப்பணத்திலிருந்து பண உதவியும் தந்து, கிராமப் பொருளாதாரத்தை வாட்ட நிலையில் பாதுகாத்து வருகின்றனர்?

இத்தகு அலங்கோல நிலையில், ஆதாரக் கல்வியைத் திணித்து, உழவன் பெற்றெடுக்கும் செல்வங்களை உழவர்களாக மட்டுமே பயிற்றுவிக்கப்போகிருேம், கொல்லன் குடும்ப விளக்குகளை கொல்லர்களாகவே தொழில் செய்து, உயிரோடு இருக்கும் வரையில் இல்லாமையால் இடர்பட்டு, காலம்வரும் முன்னரே இளைத்தும் களைத்தும் மடிய வைக்கப்போகிருேம் என்று இந்தியக் கல்வி அமைச்சர் ஆசாத், வேறு சொற்களால் சொல்லுவது, வேதனைதரும் விசித்திரமாகும். அதுவுமன்றி, கல்வித் துறைபற்றி காங்கிரசுக் கட்சியினருக்குள்ள அடிப்படைக் குழப்பத்தை, ஆதாரக்கல்வி மூலம் பொதுமக்களால் தெரிந்துகொள்ளவும் முடிகிறது. இந்தியப் பேரரசைச் சேர்ந்த கல்வி நிபுணர் ஒருவர் ஆதாரக் கல்விக்கு அன்பளிப்பாகத் தந்துள்ள கையறு நிலை பற்றி பின்னர் ஆராய்வோம்.

# 'எனது நாடு என்ற உரிமை உணர்வு தேவை'

## 'எட்டு ஆண்டுகளில் கழகம் பெற்றுள்ள வளர்ச்சி மகத்தானது'

## 'வளரும் கழகம் தாங்கிக் கொண்ட எதிர்ப்புகள் சாதாரணமானவை அல்ல'

### திராவிடநாடு விடுதலை வாரவிழாவில் கருணாநிதி

**17—9—57-ல், சென்னை—சைதையில் நடைபெற்ற திராவிட நாடு விடுதலை வார விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—**

"எட்டு ஆண்டுகளைத் தாண்டி ஒன்பதாவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கிறது இன்று, திராவிட முன்னேற்றக் கழகம்.

"இந்த எட்டு ஆண்டுகளில் கழகம் பெற்றுள்ள வளர்ச்சி கண்டு நாம் பெருமிதம் கொள்கிருேம். ஆனுல் இந்த வளர்ச்சிக்காக, நாம் அனுபவித்திருக்கிற இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல; ஏற்றுக் கொண்டிருக்கிற தியாகத் தழும்புகள் சாதாரணமானவை அல்ல; தந்துள்ள பலியும் குறைவானதல்ல! இன்று, நமது இந்த வளர்ச்சிகண்டு பொருதவர்கள் கூட, திராவிடத்தின் விடுதலைக்குப் பாடுபடக்கூடிய ஒரே இயக்கம்—ஒரே கழகம் தி. மு. கழகம் தான் என்பதைமறுக்கமாட்டார்கள்

"கழகம் துவங்கப்பட்ட நேரத்தில், 'இவர்களால் ஆகுமா?' என்ருர்கள்; 'சிலநாளில் அழிந்து போவார்கள்' என்று ஆரூடம் கூறினுர்கள். அவர்கள் எல்லாம் இன்று, எட்டாண்டுகள் தாண்டி, ஒன்பதாம் ஆண்டில் கழகம் அடியெடுத்துவைக்கிற நேரத்திலும் கூடத்தான் கேலி பேசுகிருர்கள்.

திராவிடநாடு என்று நாம் முழங்கத் துவங்கிய நேரத்தில், 'திராவிடம் என்ற சொல்லே கற்பனை' என்ருர்கள்; 'இந்தச் சொல் இலக்கியத்தில் உண்டா?' என்று கேட்டார்கள். அப்போது நாம் வாதத்திற்காக, 'திராவிடம் என்ற சொல் இல்லை என்றே வைத்துக்கொள்வோம்; அதற்காக, நாம் கேட்கும் நாடு எப்படி இல்லாமற்போகும்?' என்று எடுத்துரைத்தோம்.

"முஸ்லிம்களுக்காக ஒரு தாயகம் வேண்டும்—தேசம் வேண்டும் என்று கருதிய ஜின்ஞ, புதிதாக ஒரு சொல்லையே உருவாக்கினுர்; 'பாகிஸ்தான்' என்ற ஆங்கில மொழிச் சொல்லின் ஒவ்வொரு எழுத்தும் உலகில் முஸ்லிம்கள வாழும் நாட்டைக் குறிப்பதாகும். அப்படி உருவாக்கிய பாகிஸ்தான் என்ற சொல் இலக்கியத்தில், குரானில் உண்டா என்று கேட்காதவர்கள் நம்மைக் கேட்டார்கள். ஆனுல், 'திராவிடம்' என்ற சொல் உண்மையில் இல்லையா என்றுல், இருக்கிறது—தாகூரின் தேசியக் கீதத்தில், 'மனேன்மணீயம்' இயற்றிய சுந்தரம் பிள்ளை பாடலில் 'திராவிடம்' இருக்கிறது; நமது திராவிடத்தில் எல்லா வளங்களும் இருக்கின்றன; மூன்றுபுறம் கடல்களும், மாமலைகளும், மலைச் செல்வங்களும் இருக்கின்றன; நமக்கென மொழிகளும், வரலாறும் இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டித்தான் கேட்கிருேம்—'திராவிடநாடு வேண்டும்' என்று.

"இத்தாலிநாட்டு மாஜினி ஒருமுறை தன் நாட்டைப் பற்றிப் பேசும்போது சொன்னுன்—'இத்தாலி நாட்டில் இயற்கை வளம் இருக்கிறது; அறிவு, பொருள், வீரம், இலக்கியம் அத்தனையும் இருக்கின்றன; என்றுலும், இது என்னுடைய நாடு என்று சொல்லுகிற உரிமை உணர்வுதான் இல்லை' என்ருன்; நமது அண்ணு அவர்களும் இன்று அதைத்தான் நாட்டு மக்களுக்குக் கூறுகின்ருர்.

"மேடையிலே பேசுகிற திராவிடநாடு கோரிக்கையைத்தான் சட்டசபையிலும் இவர்கள் பேசுகிருர்கள் என்று குறை கூறுகிறவர்களுக்குச் சொல்லுவேன்—'மேடையில் பேச ஒரு நாக்கும், சட்டசபையில் பேச ஒரு நாக்குமாக எங்களுக்கு இரண்டு நாக்குகள் இல்லை; தமிழ்நாடு, தமிழ்நாடு என்று வெளியில் பேசிவிட்டு, உள்ளே சென்றதும், 'தமிழ்நாடு' என்று பெயர்வைக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு எதிராகப் பேசுவதும், வாக்களிப்பதுமான செயலில் நாங்கள் ஈடுபடமாட்டோம்.

"கைத்தறிக்குப் பாதுகாப்புத் தருவதாக மேடையில் பேசிவிட்டு, சட்டசபையில், கைத்தறிக்கு விரோதமான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டதில்லை.

"இப்படி இருக்கும் காங்கிரஸ் மந்திரிகள், 'இவர்களிடம் சரக்கு ஒன்றுமில்லை; எதற்கெடுத்தாலும் வடக்கு—தெற்கு என்றே பேசுகின்றனர்' என்று கேலி செய்கின்றனர். சட்டசபை நடவடிக்கைகளை சர்க்கார், மலிவான விலைக்குப் புத்தகம் போட்டுக் கொடுத்தால், மக்கள் அறியமாட்டார்களா—நாங்கள் சட்டசபையில் என்னென்ன விஷயங்கள் பற்றியெல்லாம் பேசினேம் என்பதை அறியமாட்டார்களா? எதற்கெடுத்தாலும் வடக்கு—தெற்கு என்று மட்டும்தான் பேசிக்கொண்டிருந்தோமா என்பதை மக்கள் அறிய, புத்தகம் போட்டு, மலிவான விலைக்குத் தருமா சர்க்கார்!

"நான், நங்கவரம் விவசாயப் பெருமக்கள் அவதிப்பற்றி சட்டசபையில் பலமுறை எடுத்துரைத்தேன்; இந்த சர்க்கார் என்ன செய்தது?

"இன்று, அங்குள்ள விவசாயப் பெருமக்கள் அறப்போர் நடத்தி, தங்கள் கோரிக்கைகளைப் பெற்றபிறகு, மந்திரி பக்தவத்சலம் பேசுகிருர்—'நான் சொன்னபடி கேட்டிருந்தால் விவசாயிகளுக்கு இன்னும் நன்மைகள் கிடைத்திருக்கும்'—என்று!

"என்ன சொன்னுர், பக்தவத்சலம் என்னிடம்? நான் இரண்டு மூன்று முறைகள் சந்தித்தேனே அவரை—விவசாயிகளுக்கு அவர் காட்டிய வழிதான் என்ன? தெரிவித்த உருவான யோசனை தான் யாது? அவர் தெரிவித்த யோசனைகள் எதையும் நான் தட்டி நடந்தேனு, இல்லையே! மறைமுகமாக நிலப்பிரபுக்களிடம் பேரம் பேசிக்கொண்டு விவசாயிகளைத் தவிக்க

(3-ம் பக்கம் பார்க்க)

# ‘வெளிநாடுகளில் தமிழர் பரம்பரை அவதியுறுவானேன்?’

## ‘இந்தியின் அடிச்சுவடே இங்கு ஏற்படக்கூடாது’

### சென்னை கூட்டங்களில் தோழர் கண்ணதாசன்

**14, 17—9—57**-ந் தேதிகளில் சென்னை—திருவொற்றியூர், சிந்தாதிரிப்பேட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றப் பொதுக்கூட்டங்களில் தோழர் கண்ணதாசன் அவர்கள் ஆற்றிய உரைகளின் சாரம் இங்கு தரப்படுகிறது :—

“திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பொலிவோடு வளர்ந்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை அனைவரும் கவனிக்கிறார்கள். வடக்கிலிருந்து வரும் திட்டங்களை பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்ன என்பதை அறிய எல்லோரும்—வடநாட்டு ஆட்சியாளர் உள்பட அனைவரும் கவனிக்கிறார்கள்.

“பாராளுமன்றத்தில் தோழர் சம்பத் அவர்கள் பேசிய பேச்சை எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டின. பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் அளவுக்கு அவருடைய பேச்சு அமைந்திருந்தது. ஆந்திரத்திலிருந்து சென்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் பலரும், வங்க உறுப்பினர்களும் சம்பத் அவர்களிடம் சென்று அவருக்குப்பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். நாம் நிறையபேர் இருந்தால்தான் காரியத்தைச் சாதிக்க முடியுமென்பதல்ல; அதைத்தான் பாராளுமன்றத்தில் நமது குரல் எடுத்துக் காட்டியிருக்கிறது; நாம் மக்களிடமும் அதைத் தெளிவாக்கி வருகிறோம்.

“திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கைகளுக்கு ஆதரவாக—சாதகமாக வருபவர்களை கட்டிக்காத்துவரும் இயக்கமாகும். மற்றவர்கள் தானாகப் போய் விழுந்து மக்களைத் தன் பக்கம் இழுக்க முயற்சிக்கிறார்கள்; முடிவதில்லை.

“நாம் வடநாட்டானுக்கு அடிமையென்பதை, இந்திப் போர்டை இங்கே எங்கெங்கு பார்க்கிறோமோ அங்கெங்கே உணருகிறோம். அதைக்காணும் போது நமக்கு ஏற்படும் அவ்வுணர்ச்சி வெறியாக மாறி விடுகிறது.

“இந்நாட்டில் இந்தியின் அடிச்சுவடே ஏற்படாமல் செய்ய வேண்டும்—அல்லது இந்த ஆட்சியை ஆட்டம்காண வைக்க வேண்டும். அதற்கான போராட்டம் ஏற்பட வேண்டிய நிலை உருவாகி வருகிறது. இந்தி ஒரு தேசிய மொழியல்ல; அது ஒரு லம்பாடி மொழி. சுப்பிரமணியம் போன்றவர்கள் ரூ. 1,500-க்காக இந்தியை ஆதரித்துவந்தால் இந்நாட்டில் இரத்தகளறி ஏற்பட்டே தீரும்.

“வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நம் நாடு எப்பொழுது விடுதலையடையும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், ‘வெளிநாட்டில் வாழும் தமிழருக்கு ஏதும் செய்யமுடியாது’ என்று பண்டித நேரு கூறியிருக்கிறார். அவருடைய பரம்பரை அங்கு தமிழர்களின் நிலையில் இல்லை; எனவே, அவர் அவ்வாறு கூறுகிறார். தமிழர் பரம்பரை ஒன்றுதான் அவதிப்படும் பரம்பரையாக வெளிநாடுகளில் வாழ்கிறது; அதனால், பண்டித நேருவுக்கு அக்கறை கிடையாது.

“வரலாறு — இனம் — மொழி ஆகியவைகளை வைத்துக் காப்பவர்கள் யார்? நீங்கள் மனதார எண்ணிப்பார்த்தால் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு கட்சி திராவிடமுன்னேற்றக் கழகம் ஒன்றுதான்.

“பண்டித நேரு பேசுகிறார் என்பதற்காகவே இங்குள்ளவர்கள் எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், ‘தமிழின் மேல் ஆணை’யிட்டுக் கூறுகிறேன்-நிச்சயம் இங்கு ஓர் இரத்தக்களறி ஏற்பட்டேதீரும். இதை காங்கிரஸ்காரர்களுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

“நம்முடைய நாகரிகத்திற்கும் அவர்களுடைய நாகரிகத்திற்கும் தொடர்பு இல்லை; நம்முடைய மொழிக்கும் அவர்களுடைய மொழிக்கும் தொடர்பு இல்லை. வடநாடு—தென்னாடு இரண்டும் இருவேறு இன மக்களைக் கொண்டவைகள் என்பதை உணர வேண்டும்; இந்த இரண்டும் இணைந்துவிட முடியும் என்பது முடியாத ஒன்று.”

---

டில்லியிலுள்ள இலாகாக்கள்

## உணராத விந்தை!

### அபிவிருத்தி நிலைபற்றி கேரள சட்ட அமைச்சர்

கோழிக்கோடு, செப். 23—“நாட்டின் எல்லாப் பகுதிகளையும் ஒரேமாதிரியாக அபிவிருத்திச் செய்யவேண்டும் என்பதை டில்லியிலுள்ள பல இலாகாக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு செய்தால்தான் தென்பகுதியில் உள்ள மக்கள் நாட்டின் வளர்ச்சியைக் கணக்கிட முடியும்”

என்று, கேரள சட்ட அமைச்சர் கிருட்டின அய்யர், மலபார் வர்த்தக சபையின் 28-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### 2,932 கிராமங்கள் கொடை

டால்டன்கஞ்ச், செப். 23—நிலக்கொடை இயக்கத்திற்கு 1957 ஆகஸ்டு முடிய மொத்தம் 2,932 கிராமங்கள் கிடைத்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சென்னை 223 கிராமங்களை அளித்துள்ளது.

---

## வேண்டுகோள்

“சமீபத்தில் முதுகுளத்தூர்—பரமக்குடி—இராமநாதபுரம்—சிவகங்கை ஆகிய வட்டங்களில் சாதி வெறிச் செயல்களால் உயிரிழந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், தொழிலாளத் தோழர்களுக்கும், அன்னாரின் குடும்பத்தார்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் சொல்வதுடன், இனியேனும் சாதி வெறிச் செயல்களில் ஈடுபடாமல் சமாதானத்துடன் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

“மேலும், அமைதியை நிலைநாட்ட இத்தொகுதி சம்பந்தப்பட்ட இருதரப்பாளர்களின் எம்.எல்.ஏ., எம்.பி.-க்களும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்வதுடன், ஆட்சியாளர்களும், போலீஸ் படைக்குள் சாதி முறையைக் கிளப்பாது, தயவு தாட்சண்யம் பார்க்காது, இன்னும் தக்க போலீஸ் பாதுகாப்பு கொடுத்து, இருதரப்பாருக்கும் இன்னல் விளையாது பார்த்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்”

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் இ. லெ. ம. சௌந்திரபாண்டியன் அவர்கள் அறிவிக்கிறார்.

---

# ‘வஞ்சிக்கும் வடநாட்டிலிருந்து திராவிடம் பிரிவது உறுதி’

## ‘தமிழகத்தில் சிறந்த எதிர்க் கட்சியாகத் திகழ்வது தி. மு. கழகம்தான்’

### கீழப்பாவூர் திராவிட விவசாய சங்கத் துவக்க விழாவில் தோழர் டி.எஸ். ஆதிமூலம் எம்.எல்.ஏ. பேச்சு

“மக்களாட்சி மலரும் நாட்டில் ஆளும் கட்சிக்குப் பலம் பொருந்திய எதிர்க்கட்சி தேவையாகும். பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சியிலிருந்தால் தொழிற் கட்சி மிகப் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக விளங்கும்; அதேபோல், தொழிற் கட்சி ஆட்சியிலிருந்தால் கன்சர்வேடிவ் கட்சி எதிர்க்கட்சியாக விளங்கும். அப்படிப் பலம் பொருந்திய இரு கட்சிகளை அந்த நாட்டு மக்கள் உருவாக்கி மக்களாட்சியை மாண்புறச் செய்திருக்கிறார்கள். அதுபோல, தென்னாட்டில்—திராவிடநாட்டில்—தமிழகத்தில் ஆளும் காங்கிரசுக் கட்சிக்குப் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் விளங்கிவருகிறது”

—என்று, 1—9—57-ல் கீழப்பாவூர் திராவிட விவசாயச் சங்கத் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தோழர் டி. எஸ். ஆதிமூலம் எம்.எல்.ஏ. அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது :—

“திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாயத்திலே மலிந்து கிடந்த மூட நம்பிக்கைகளை ஒழித்து சாதி ஒழிப்புக்காகப் பெரும் பாடுபட்டது.

“வட நாட்டின் பண்பாடு, மொழி, கலாச்சாரம் வேறு; தென்னாட்டின் மொழி, கலாச்சாரம் வேறு!

“தென்னாட்டு மாநில அரசுகளெல்லாம் சாதாரண பஞ்சாயத்துப் போர்டுகளைப்போன்று, அதிகாரங்களெல்லாம் டெல்லி ஆட்சிப்பீடத்தில் குவிக்கப்பட்டுள்ளன. மேலும், தென்னாட்டிற்கு ஐந்தாண்டுத் திட்டங்களிலே சில இலட்சக்கணக்கான ரூபாய்களும் வடநாட்டிற்குப் பல கோடிக் கணக்கான ரூபாய்களும் ஒதுக்கப்பட்டு தென்னாட்டை வஞ்சித்து வருகிறார்கள். இதை நன்றாக நாட்டு மக்களுக்கு உணர்த்தி, நாடு பிரிய வேண்டிய அவசியத்தை உணர்த்திவருகிறது தி. மு. கழகம். விரைவிலேயே திராவிட நாட்டைப் பிரித்துத் தென்னகத்தின் முதலமைச்சராக அண்ணா அவர்கள் வீற்றிருப்பார்கள். அதற்கான ஆதரவை மக்களெல்லாம் அளிக்க வேண்டும்.

“இந்த நாட்டிலே காங்கிரசார் விவசாய சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் என்று பெயரை வைத்துக்கொண்டு ஓட்டுக்களை வேட்டையாடவே அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

“ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயத் தொழிலாளர் சங்கங்களைத் துவக்கி அந்தந்தத் தொழில்களிலே ஈடுபட்டுள்ள தொழிலாள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பெரும் போராட்டங்களும், கிளர்ச்சிகளும் நடத்துகிறது. அதேபோல், கோரிக்கைகளை நிறைவேற்றவும், உரிமைகளை அடையவும் மக்கள் அனைவரும் திராவிட விவசாய சங்கத்திற்கு ஆதரவு கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.”

கீழப்பாவூர் திராவிட விவசாய சங்கத் துவக்கவிழா 1—9—57 இரவு 8 மணிக்கு பாண்டியனார் திடலில் திரு. டி. எஸ். ஆதிமூலம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திராவிட விவசாய சங்கத்தின் நோக்கங்களையும், தி. மு. கழகத்தின் கொள்கைகளையும் விளக்கி திரு. ஆ. திராவிடமணி, வழக்கறிஞர் செவந்தி, வி. அருணாசலம் ஆகியோர் பேசினர்.

மாலை 5 மணிக்கு திரு. எஸ். இலக்குமணன் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது.

விழாவின் இறுதியில் பேச்சாளர்களுக்குப் பல கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. திரு. எ. இராமநாதன் நன்றி நவின்றார்.

கூட்ட முடிவில் கலைவாணர் அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், நங்கவரம் போராட்டத்துக்கு ஆதரவு நல்கியும், இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

# கன்னியப்ப நகரில் பொதுச்செயலாளர் முழக்கம்

## இளைஞர் முன்னேற்ற மன்றக் கூட்டத்தில் கா. அப்பாதுரை, ஆர். எஸ். பாண்டியன் பேச்சு

சென்னை — கன்னியப்ப நகர் இளைஞர் முன்னேற்ற மன்றத் துவக்க விழா, 18—9—57 அன்று கன்னியப்ப நகரில் சிறப்பாக நடைபெற்றது.

விழாக் கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கான மக்கள்—ஆண்களும், பெண்களுமாக திரண்டிருந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள், தமிழரின் பண்டையப் பெருமை குறித்தும் பெருமைமிகு பண்பாடு குறித்தும் விளக்கி, அந்தப் பண்பாட்டினை வளர்க்கவும், காப்பாற்றவும் இளைஞர்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அடுத்தாற்போல் தோழர்கள் சிவ. கணேசன், டி. கே. ஆறுமுகம், டி. ஆர். செயராமன் ஆகியோர் இளைஞர் முன்னேற்ற மன்றத் துவக்கம் பற்றியும், அதன் நோக்கம் பற்றியும் விளக்கியதுடன், திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களையும், இலட்சியத்தையும் ஏற்று மன்றம் பாடுபடும் என்பதையும் எடுத்துரைத்தனர்.

பின்னர் தோழர் ஆர். எஸ். பாண்டியன் இன்றைய சமுதாய அமைப்பு குறித்தும், கழகம் விரும்பும் மாற்றங்களுக்கான அடிப்படை குறித்தும் விளக்கினார்.

அடுத்தாற்போல் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இளைஞர் முன்னேற்ற மன்றத்தைத் துவக்கிவைத்தார். அவர் பேசும்போது, ‘எதிர்ப்புக் காட்டுகிறவர்களும், ஏளனம் செய்கிறவர்களும் நம்மையறியாதவர்கள்; நம்மையும், நமது கொள்கைகளையும் அறிந்து சிந்திப்பார்களேயானால், அவர்களே உணருவர்—தங்கள் கடந்தகால எதிர்ப்பு வெட்கப்படத்தக்கது என்பதை’ என்று சுட்டிக்காட்டி, கழகம், கடந்த எட்டாண்டுக் காலமாக வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட்டு வருவதையும், அந்தப் பாதையில் ஏற்பட்ட எத்தனையோ எதிர்ப்புக்களையும் தாண்டித்தான் கழகம் வளர்ந்துவருகிறது என்பதையும் விளக்கி அரியதோர் கருத்துரை நல்கினார்.

சாதி-மதபேதங்கள் அகன்ற ஒரு நல்ல சமுதாயம்—ஒன்றுபட்ட சமுதாயம் உருவாகவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

பொதுச்செயலாளருக்கும் இதரர்களுக்கும் எண்ணற்ற மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

---

# திராவிடநாடு விடுதலை விழாவில் கருணாநிதி

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விடுகிற பரம்பரையில் வரவில்லையே, கருணாநிதி!

“இந்தச் சர்க்கார் ஒரு சட்டம் போட்டது—விவசாயிகளுக்கு நன்மை தருவதற்கெனக் கூறி 60—40 என்ற சட்டம்; சட்டத்தைக்காட்டி, ஒட்டும் வாங்கியாகி விட்டது; ஆனால், அதில் இருந்த ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்திக்கொண்டு நிலப்பிரபுக்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றியும் கண்டார்கள்; விளைவு, நங்கவரம் வட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

“சர்க்கார் செய்தது என்ன? தாங்கள் இயற்றிய சட்டத்தில் காணப்பட்ட ஓட்டைகளை அடைக்க முன்வந்தார்களா? இல்லை. பெண்கள்கூட குடத்தில் ஓட்டை விழுந்தால் உடனே புளி வைத்தேனும் அதனை அடைப்பார்கள்; ஆனால் நமது சர்க்கார், தாங்கள் இயற்றிய சட்டத்தின் ஓட்டைகளை அடைக்க நினைக்கவில்லை. ‘தீப் பிடித்துக்கொண்டது; தீயணைக்கும் படையை அனுப்புங்கள்’ என்று விவசாயிகள் கேட்டனர்; ஆனால் சர்க்காரோ, ‘தீ ஏன் பிடித்தது தெரியுமா?’ என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். பிறகுதான், விவசாயிகள் அறப்போரில் ஈடுபட நேர்ந்தது. இப்பொழுது வந்து பேசுகிறார்கள்—‘நான் சொன்னபடி நடந்திருந்தால்’ என்று; என்ன பயன்?

“‘இந்தப் போராட்டம் வெறும் அரசியல் ஸ்டண்ட்’ என்று இழித்தும் பழித்தும் பேசினார், இன்னொரு மந்திரி. அவர்கள் இயற்றிய சட்டத்திலிருந்த குறைபாடு காரணமாக எழுந்த தகராறு—அதன் காரணமாகப் போராட்டம்—என்ற நிலையில், மந்திரி இதனை ‘அரசியல் ஸ்டண்ட்’ என்று பேசுவானேன்?

“அடுத்து, நாம் சுதந்திரம் வேண்டும் — திராவிடம் தனி நாடாகவேண்டும் என்று பேசும் போது, ‘அதெல்லாம் முடியாது’ என்று இங்குள்ள மந்திரிகள் பேசுகின்றனர்—ஏதோ இவர்களிடத்தில் திராவிட நாடு இருப்பதுபோல! நாம் திராவிடம் கோருவது இவர்களிடமிருந்தல்ல; இவர்களது எஜமானர்களிடமிருந்துதான் நாம், நமது உரிமைகளைக் கேட்கிறோம்.

“சிலர் கேட்கிறார்கள்—‘டெல்லி சர்க்கார் நமக்குத் தேவையான நலன்களைச் செய்தால் அப்போது ஏன் இந்தத் தனி நாடு?’—என்று! நாம் கூறுவதெல்லாம்—‘அவர்கள் ஆயிரம் நன்மைகள் செய்தாலும், அவர்கள் நமக்கு அன்னியர்களாவர்; அந்த அன்னியர்களின் ஆட்சியின் கீழ் நாம் ஏன் வாழவேண்டும்?’—என்பதுதான்.”

---

### முகவரி :

பி. எஸ். செல்வா அவர்களை இன்னிசை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அழைக்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும் :—

**பி. எஸ். கலைத்தூதன்,**
**1, கான்பாளையம் 2-வது தெரு,**
**மதுரை.**

# திருவண்ணாமலை மாநாட்டுத் தீர்மானங்கள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டங்களைச் சார்ந்த சிற்றூர்களில் வகுப்புக் கலவரங்கள் மூண்டு கொலை — கொள்ளை — தீயிடுதல் போன்ற அக்கிரமங்கள் தாண்டவமாடவும், அவற்றின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அச்சங்கொண்டு, அவதியுற்று ஊரைவிட்டே ஓடும்படியாகவும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு இம்மாநாடு துயரமும், வருத்தமும், கவலையும் அடைவதுடன், காலாகாலத்தில் தலையிட்டுத் தவறான வகுப்புணர்ச்சி தலைதூக்காமல் அமைதியை நிலைநாட்ட சென்னை அரசியலார் முயலாமல், கலவரங்களினால் கொலைகள் ஏற்பட்டது போதாதென்று போலீசார் துப்பாக்கிப்பிரயோகங்கள் செய்து மேலும் சிலரைச் சுட்டுத்தள்ளியிருப்பது கண்டு வருத்தங்கொண்டு அச்செய்கையை வன்மையாகக் கண்டிப்பதோடு, அரசியலார் இதுவரையில் கையாண்டு வருகிற முறைகள் கலவரங்களை வளர்ப்பதாகவே இருக்கிற காரணத்தால், கலவரப் பகுதிகளுக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட சர்வகட்சித் தலைவர்களைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை நிறுவி, நிலைமை சீரடைவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிதல்: எஸ். ஙந்து.
வழிமொழிதல்: கள்ளக்குறிச்சி நடராசன் எம்.எல்.ஏ.

## 4. ஐந்தாண்டுத் திட்டம்

தென்னாட்டை வஞ்சித்து வடநாட்டை வளமாக்கும் முறையில் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்ட டில்லி ஆதிபத்தியம் இப்பொழுது அதற்கான நிதி நிலைமைகளைச் சமாளிக்க முடியாத நிலையில், பெரியதும் முக்கியமானதுமான திட்டங்களைமட்டும் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, வடநாட்டில் போடப்பட்டுள்ள பெருந்திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதில் மிக்கக் கவனமாக இருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், தொழில்துறையில் தாழ்ந்துள்ள தென்னாட்டை வளப்படுத்தும் வகையில் திட்டத்தை மாற்றி அமைக்குமாறு இம்மாநாடு டில்லி அரசை வற்புறுத்துகிறது.

முன்: என். எஸ். இளங்கோ
வழி: கி. மனோகரன்

## 5. விலைவாசி ஏற்றம்

பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டங்களைத் தொடர்ந்து போட்ட காரணத்தாலும், ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் வடநாட்டில் மட்டும் பெருவாரியான பணத்தைக் கொட்டிய காரணத்தாலும், பணப்பெருக்கம் உண்டாகி, விலைவாசிகள் குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதை இம்மாநாடு கவலையோடு கவனிப்பதுடன், பணப்பெருக்கத்தைத் தணிக்கவும், செலவினங்களை எல்லாப் பகுதிகளிலும் ஏற்ற அளவு பகிர்ந்திடவும், உணவுப் பொருள்களின் விலைகளைத் தக்க முறையில் கட்டுப்படுத்தவும் வேண்டும் என இந்திய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. கே. நீலமேகம்
வழி: பாண்டிச்சேரிவழக்கறிஞர் எஸ். பெருமாள்
ஈர். ஆர். கிருஷ்ணன்

## 6. வரிக் கண்டனம்

வாழ்க்கைத் தரம் குறைந்து, விலைவாசிகள் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரம் சீர்கேடு அடைந்திருக்கும் நிலையில், பெருவாரியானப் பொதுமக்களைப் பாதிக்கும்படி நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஆண்டுதோறும் நூறு கோடி ரூபாய் அளவுக்கு புது வரிகளைப் போட்டுள்ளதானது நாட்டின் நிலைமையை மேலும் மோசமாக்கி இருப்பதற்காக இந்தியப் பேரரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், "செலுத்தக்கூடியவர்கள் மீது மட்டுந்தான் வரி போடுவோம்" என்று தேர்தல் காலத்தில் கூறிய காங்கிரசுக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், நூற்றுக்கு எழுபத்தைந்து பங்கு வரியை ஏழைகள் பயன்படுத்தும் பண்டங்கள் மீது சுமத்தியிருக்கும் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவதுடன், ஏழைகளைப் பாதிக்கும் இக்கொடும் வரிகளை நீக்குமாறு இந்தியப் பேரரசை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்: சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.,
வழி: ஆனந்தம் எம்.எல்.ஏ., பாலகுருசாமி

## 7. கைத்தறி

தேர்தல் காலத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு உறுதிமொழிகள் பல தந்து அவர்களுடைய ஆதரவைத் தேடி பெரும்பான்மை வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அதே கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாப்பிற்கு என்று, 'கரைபோட்ட வேட்டியும், கலர்ப் புடவையும் கைத்தறிக்கே ஒதுக்கப்படவேண்டும்' என்ற தீர்மானம் சென்னை சட்டமன்றத்தில் வந்தபோது, தமது கட்சி கட்டுப்பாட்டிற்காக அதை எதிர்த்து வாக்களித்தவன் செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், கைத்தறி நெசவுத் தொழிலாளர் பாதுகாப்புக்கு நிரந்தரமான ஒரு திட்டத்தை இந்த அரசியலார் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்: ப. கண்ணன்
வழி: காஞ்சி-மணிமொழியார் முத்துக்கருப்பன்

## 8. தமிழ்நாடு பெயரிடுதல்

தமிழ் மக்களின் தாயகமான தமிழகத்திற்குச் 'சென்னை ராஜ்யம்' என்று வழங்கும் பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்றே பெயரிட்டு வழங்கவேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகவே பல்வேறு அரசியல் கட்சியினரும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டும், சென்னை சட்டமன்றத்தில் அதற்கான தீர்மானத்தைக் கொண்டுவந்துங்கூட, ஆளும் கட்சியினராகிய காங்கிரசார், பொதுமக்களின் விருப்பத்தை மதியாது மாறாக நடப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலும் பொதுமக்களின் விருப்பத்தை அவமதித்துப் பொறுமையைச் சோதிப்பது பெருங் கேடு பயக்கும் என்று அரசியலார்க்கு இம்மாநாடு எச்சரிக்கை செய்கிறது.

முன்: இரா. செழியன்
வழி: சி. பி. சிற்றரசு
அரங்கண்ணல்

## 9. படாஸ்கர் தீர்ப்பு

படாஸ்கர் தீர்ப்பு மக்களுக்குத் தெளிவாக இதுவரை அறிவிக்கப்படாதிருக்கிற வருந்தத்தக்க நிலையில், ஓரளவு தெரிவிக்கப்பட்டு வரும் தகவல்களிலிருந்து தமிழ்நாட்டுக்குத் திருத்தணியும் அதை ஒட்டிய சில கிராமங்களும் கிடைக்க இருக்கிறது என்று அறிந்து இம்மாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

அதேபோது, எற்கெனவே தமிழ்நாட்டுடன் பல்வேறு வகையாலும் தொடர்புகொண்டு இணைந்து வாழ்ந்துவரும் சில பகுதிகளிலும், வளமிக்க இடங்களும், செல்வக் காடுகளும், நீர்ப்பாசன வசதிகளும், ஆரணியாறு தேக்கத் திட்டப் பகுதியும், படாஸ்கர் தீர்ப்புப்படி, அங்கு வாழும் மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக, தமிழ்நாட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, ஆந்திரத்திற்கு அளிக்கப்பட இருப்பதறிந்து, இம்மாநாடு வருந்துகிறது. சென்னை அரசு, தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு உரிமையுள்ள இடங்களை இழந்து வருவது கண்டு வருந்துவதுடன், தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தவறிவரும் சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் திருத்தணிப் பகுதியைப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தமிழ்நாட்டிலிருந்து வேறு பகுதிகளை வெட்டாமலிருக்கும் முறையிலும், உரிமையை நிலைநாட்டத் தக்கவகையிலும், மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு சென்னை அரசினை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்: க. அன்பழகன்
வழி: வி. பி. இராமன்
டி. கே. பொன்னுவேலு

## 10. நங்கவரம் அறப்போர்

திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் நங்கவரம் பகுதியில், அரசாங்கச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக பெரிய நிலப்பிரபுக்கள் இழைக்கவிருந்த கொடுமைகளை எதிர்த்து, உறுதியும் அமைதியும் குலையாதவகையில் அறப்போர் நடத்தி வெற்றி கண்ட உழவர் பெருங்குடி மக்களைப் பாராட்டுவதுடன், அந்த வட்ட உழவர் முன்னேற்றச்சங்கம் நடத்திய அறப்போரில் ஈடுபட்டவர்களில் 200 உழவர்கள்மீது 70-க்கு மேற்பட்ட வழக்குகளைப் போட்டிருப்பதில், குறிப்பிட்ட பிரச்சினையில் நிலச்சுவான்தாரர்களுக்கும் உழவர்களுக்கும் கடந்த 9-9-57-ந் தேதி உடன்பாடு ஏற்பட்டுவிட்டபடியால், அந்த வழக்குகளையெல்லாம் நிபந்தனையின்றி உடனடியாக அரசாங்கம் வாபஸ் பெற வேண்டுமாறு இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்வதுடன், சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாகத் திருத்தி, உழவர் பெருங்குடி மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கவேண்டுமென வற்புறுத்துகிறது.

முன்: குளித்தலை-முத்துகிருட்டினன்
வழி: திருச்சி-காமாட்சி

## 11. பிடித்தொழிலாளர்

தமிழ்நாடு முழுதும் உள்ள பீடித் தொழிலாளர்களுக்குப் பாக்டரி சட்டப்படி உள்ள சலுகைகள் இன்றையதினம் கிடைக்கவில்லை; ஆகவே, மேற்படி சலுகைகளைப் பெற பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று இம்மாநாடு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

முன்: எம். எஸ். மணி
வழி: சிற்றுளி-சுப்பிரமணியம்
வேலூர்-தோழியர் தேசியமணி

## 12. சர்க்கரை ஆலை

சாத்தனூர் நீர்த்தேக்கம் வேலை முடிவடைந்து விட்டதாலும், பத்து இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள் காலி செய்யப்பட்டிருப்பதாலும், கூட்டுறவு முறையில் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது அகற்றவும் மாநில அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

### பாலாற்று நீர்

(அ) மைசூர் மாநில அரசியலாருடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி பாலாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வட ஆற்காடு மாவட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்த முனையுமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்: திருப்பத்தூர் - நெடுஞ்சோழன்
வழி: எஸ். முருகையன்

## 13. ஓராசிரியர் நிலைமை

பல்வேறு மாவட்டங்களில், ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்கள் ஈராண்டுக் காலம் பயிற்சி பெற்றாக வேண்டும் என்பதற்காக—வேலையற்ற நிலைமைக்கும், வாழ்க்கை நெருக்கடிக்கும் ஆளாக்கப்பட்டிருப்பது காண வருந்துவதுடன், அவர்களது பரிதாபகரமான நிலைமை சென்னை சட்டமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டும் அரசியலார் அவர்கள் குறையைத் தீர்க்காததை இம்மாநாடு கண்டிக்கிறது.

முன்: பொற்செல்வி-இளமுருகு
வழி: வி. என். இராமசாமி

## 14. பட்டுத் தொழிற்சாலை

குடியேற்றத்தில் மூடிக்கிடக்கும் தென்னிந்திய பட்டுத் தொழிற்சாலையை உடனடியாகத் திறந்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் எஞ்சியுள்ள வாழ்வையாவது நிலைபெறச் செய்ய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்: சம்பந்தம்
வழி: சாரங்கபாணி

## 15. நாடகக் குழு நிறுவுதல்

திராவிட முன்னேற்றக் கழக இலட்சியக் கொள்கைகளை சிற்றூர்ப் பகுதிகளில் பரப்புவதற்கு ஏற்றவகையில் பயன்படும்படியான நாடகக் குழு ஒன்றை நிறுவித் தரவேண்டுமென்று பொதுச்செயலாளரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: பொன்-சொக்கலிங்கம்
வழி: வாணிதாசன்

# தலைவர்களுக்கு விருந்து

திருவண்ணாமலையில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டினையொட்டி, செப். 21, 22-ந் தேதிகளில் முறையே வரவேற்புக் குழுச் செயலாளர்களான ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., இரா. தர்மலிங்கம் எம்.பி. ஆகியோரால், வந்திருந்த தலைவர்களுக்கும், பிரமுகர்களுக்கும் சிறந்த முறையில் அறுசுவை விருந்தளிக்கப்பட்டது.

# நியாய விலைக் கடைகளுக்கு அரிசி

## தன்னை மட்டும் நம்ப வேண்டாமென்கிறதாம் டெல்லி!

புதுடில்லி, செப். 21—

தமிழ்நாட்டிற்கு மத்திய சர்க்கார் தந்துவரும் அரிசி, அக்டோபர் முதல் நிறுத்தப்படும் என்று செய்தி வெளியானதும், அப்படி நிறுத்துவது உணவு நிலையை மேலும் சீர்கேட்டிற்கு ஆளாக்கும் என்று தமிழ்நாட்டிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியதும் நினைவிலிருக்கலாம். ஆனால் இப்போது, அரிசி 'சப்ளை'யை முழுவதுமாக டெல்லி சர்க்கார் நிறுத்திவிடாது என்றும், முன்பு தந்துவந்த அளவு தராவிடினும், நியாய விலைக் கடைகளுக்கு அவை மூடப்படாமலிருக்கும் பொருட்டு கொஞ்சமேனும் அரிசி வழங்குவதெனவும் டெல்லி சர்க்கார் முடிவு எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் வழங்கும் அரிசியை மட்டும் நம்பிக்கொண்டிராமல் மாநிலத்திற்குள்ளாகவே அரிசிபெற்று, நியாய விலைக் கடைகளை நடத்த வேண்டும் என்றும் டெல்லி கூறியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★

# சேலம் தொகுதி தேர்தல் வழக்கு

## உயர் நீதிமன்றத்தில் காங்கிரசாரின் 'ரிட்' மனு தள்ளுபடி

சேலம் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகரின் தேர்தல் செல்லாதென நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடுத்திருந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாதென காங்கிரஸ் அபேட்சகர் மாரியப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த 'ரிட்' மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நெடுஞ்செழியன் தொடர்ந்துள்ள வழக்கினை தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் வாதாடி வெற்றி பெற்றுள்ளார்.

(முழு விவரம் நாளை)

★★★★★★★★★★★★★★★★★

# கழகக் கூட்டங்கள்

**நாமகிரிப்பேட்டை:**
சின்னையன் சாவடி திடலில்
26—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. முத்துகிருட்டினன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எம்.பி.சுப்பிரமணியம்எம்.எல்.ஏ.
ஜி. பி. சோமசுந்தரம்
(மாலை 4-மணிக்கு ஊர்வலம்—மாலை 5-மணிக்கு கிளைக் கழகத் திறப்பு)

★

**தென்திருப்பேரை:**
மணல்மேட்டில்
26—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. சேவந்தி
பேசுவோர்:
இரத்தினவேல்பாண்டியன்
எஸ். தங்கத்துரை
ஆ. அண்ணாமலை

★

**வெள்ளலூர்:**
கூத்தாண்டை கோயில் மைதானத்தில்
26—9—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
கி. மனோகரன்
மு. இராமநாதன்

★

**காட்டூர்:**
பசனை கோவில் எதிரில்
26—9—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: த. சொக்கலிங்கம்
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
ஆர். எஸ். பாண்டியன்
சொர்ணம்
ஜார்ஜ்
இன்னிசை: இராதாமாணிக்கம்

## சென்னை—புரசை கே. வி. கே. சாமி நினைவு மன்றத் துவக்கவிழா

### இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்வார்

25—9—57 மாலை 6-மணிக்கு சென்னை—புரசை சுந்தரம்பிள்ளை வீதியில் மேற்படி மன்றத் துவக்க விழா தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. மற்றும் பலர் பேசுவர். டேப்-இராதாமாணிக்கம், இயக்கப் பாடல்கள் பாடுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.